**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.02
https://ngmtamil.in/

# Kurinjii-tinai Organisms and Ecological Philosophy in Aghananuru: A Comparative Study

**Dr. M. Gayathri** *,
Assistant Professor, Department of Tamil Literature, NGM College, Pollachi.
*Correspondence: mgayathri1208@gmail.com.

**Article Info**
Received on 27-May2026, Revised on 29-May-2026, Accepted on 29-May-2026, Published on 01-June-2026

## ABSTRACT

In Sangam literature, human life is structured in harmony with nature. Specifically, in the Agananuru, one of the Ettuthogai (Eight Anthologies) texts, the behaviors of animals and birds are recorded with great precision against the backdrop of the mountain-based Kurinji-tinai. This article examines the ecological classification of organisms in the Kurinji landscape, their behavioral nuances, acoustic ecology, and the literary techniques of Ullurai Uvamam (implicit simile) and Iraichi (suggested meaning) that express inner emotions. The primary objective of this study is to explain how the lifestyles of animals such as bears, wild boars, tigers, and elephants are compared with human values to instill ethical principles. It further explores how this keen observation of nature by Sangam poets aligns with contemporary thoughts on Ecological Philosophy.

***KEYWORDS:*** *Agananuru, Kurinji-tinai, Ecological Philosophy, Animal Behavior, Ullurai Uvamam (Implicit Simile), Iraichi (Suggested Meaning).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

இக்கட்டுரையின் ஆசிரியர் ம. காயத்ரி ஆகிய நான், இந்த ஆய்வினை மேற்கொள்வதிலும் எழுதுவதிலும் எவ்வித நிதிசார் அல்லது பிற நிறுவன முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று பிரகடனம் செய்கிறேன். மேலும், இந்த ஆய்வு முற்றிலும் இலக்கிய நயம் மற்றும் கல்விசார் நோக்கங்களுக்காக மட்டுமே எழுதப்பட்டது.

# அகநானூற்றில் குறிஞ்சித் திணை உயிரினங்களும் சூழலியல் மெய்யியலும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு

***முனைவர் ம. காயத்ரி,** உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி,
மின்னஞ்சல்: mgayathri1208@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

சங்க இலக்கியங்களில் மனித வாழ்வு இயற்கையோடு இயைந்ததாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றில், மலைசார்ந்த குறிஞ்சித் திணையின் பின்னணியில் விலங்கினங்கள் மற்றும் பறவைகளின் நடத்தைகள் மிக நுணுக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக்கட்டுரை, அகநானூற்றுப் பாடல்களில் குறிஞ்சி நில உயிரினங்களின் சூழலியல் வகைப்பாடு, அவற்றின் நடத்தைசார் நுட்பங்கள், உயிர்-ஒலியியல் (Acoustic ecology) மற்றும் அக உணர்வுகளை வெளிப்படுத்தும் உள்ளுறை உவமம், இறைச்சிக் கோட்பாடுகள் ஆகியவற்றை ஆராய்கிறது. கரடி, காட்டுப்பன்றி, புலி, யானை போன்ற விலங்கினங்களின் வாழ்வியல் முறைகள் எவ்வாறு மானுட விழுமியங்களோடு ஒப்பிடப்பட்டு அறநெறியைப் புகட்டுகின்றன என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். சங்கப் புலவர்களின் இந்த இயற்கை அவதானிப்பு, தற்கால சூழலியல் மெய்யியல் (Ecological Philosophy) சிந்தனைகளோடு எவ்வாறு ஒத்துப் போகிறது என்பது இங்குக் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் (Keywords):** அகநானூறு, குறிஞ்சித் திணை, சூழலியல் மெய்யியல், விலங்கின நடத்தை, உள்ளுறை உவமம், இறைச்சி.

## 1. முன்னுரை

அகநானூறு எட்டுத்தொகையுள் விளங்கும் ஒப்பற்ற அகத்திணை நூலாகும். கற்றறிந்தோர் ஏத்தும் கலியொடு அகம் புறம் என்று சான்றோர்களால் போற்றப்படும் சிறப்பினை உடையது (காயத்ரி). அகநானூற்றின் செய்யுட்சுவையினை ஆராய்ந்த சான்றோர்கள் அதன் பாடல்களைக் களிற்றுயானை நிரை, மணியிடை பவளம், நித்திலக்கோவை என மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். இவற்றுள் இரண்டு மற்றும் எட்டு ஆகிய எண்களை இறுதி இலக்கமாகக் கொண்டு வரும் பாடல்கள் குறிஞ்சித்திணைக்குரியவை ஆகும்.

அகநானூற்றில் மொத்தம் எண்பது பாடல்கள் குறிஞ்சித்திணையில் அமைந்துள்ளன. அவற்றுள் இயற்கை நவிற்சிக்கு அரிய கவிஞரான கபிலர் பாடிய பாடல்கள் பதினேழு, பரணரின் பாடல்கள் பதினேழு ஆகும் (காயத்ரி). குறிஞ்சி நிலம் என்பது காடும் மலைச்சாரலும் நிறைந்த பகுதியாதலால், அங்கு விலங்குகள் மற்றும் பறவைகளின் நடமாட்டம் மிக அதிகமாகக் காணப்படுகிறது. புலவர்கள் சித்தரிக்கும் இவ்விலங்கினங்களின் வாழ்க்கை முறையும் அவற்றின் சூழலியல் பின்னணியும் வியப்புக்குரிய நுட்பங்களைக் கொண்டுள்ளன.

**2. குறிஞ்சி நில உயிரினங்களின் சூழலியல் வகைப்பாடு**

சங்க காலத் தமிழர்கள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கையை வெறும் அழகியல் பொருளாக மட்டும் பார்க்காமல், ஒரு முழுமையான சூழலியல் அமைப்பாகப் புரிந்து வைத்துள்ளனர் (சுந்தர மகாலிங்கம் 66). குறிஞ்சி நிலத்தின் வாழிட எல்லையான 'சிறுகுடி' முதல் அடர்ந்த காடுகள் வரை பரவியிருந்த உயிரினங்களின் தற்கால அறிவியல் வகைப்பாடு பின்வருமாறு அமைகிறது:

| **திணைசார் வகைப்பாடு** | **சங்க இலக்கியப் பெயர்** | **தற்கால விலங்கியல் / பொதுப் பெயர்** | **திணைச் சூழலியல் பங்களிப்பு** |
|---|---|---|---|
| **பாலூட்டிகள் (Mammals)** | களிறு, பிடி (அகநானூறு 102)<br><br>உழுவை, வேங்கை, வரி (அகநானூறு 33)<br><br>எண்கு, உளியம் (அகநானூறு 112)<br><br>கேழல், பன்றி (அகநானூறு 248)<br><br>ஆமான் (அகநானூறு 238)<br><br>முசு, கடுவன், மந்தி (அகநானூறு 2) | ஆசிய யானை (*Elephas maximus*)<br><br>வங்கப் புலி (*Panthera tigris*)<br><br>தேன்கரடி (*Melursus ursinus*)<br><br>காட்டுப்பன்றி (*Sus scrofa*)<br><br>காட்டுப்பசு / காட்டெருமை (*Bos gaurus*)<br><br>குரங்கு வகைகள் (Langurs & Macaques) | காட்டின் முதன்மை நுகர்வோராகவும், உணவுச் சங்கிலியின் முக்கியக் கண்ணிகளாகவும் விளங்குதல் (சாமி, *விலங்கின விளக்கம்* 45). |
| **பறவைகள் (Birds)** | மஞ்ஞை, மயில் (அகநானூறு 82)<br><br>கூகை (அகநானூறு 122)<br><br>வாரணம், | இந்திய மயில் (*Pavo cristatus*)<br><br>புள்ளி ஆந்தை (*Bubo nipalensis*)<br><br>காட்டுக் கோழிச் | கால மாற்றங்களையும், சூழல் ஒலிகளையும் அறிவிக்கும் குறிகாட்டிகளாகச் செயல்படுதல் (சாமி, *புள்ளின விளக்கம்* 112). |

| | | | |
|---|---|---|---|
| | காட்டுக்கோழி (அகநானூறு 392)<br><br>அசுணம்[^2] | சேவல்<br><br>இசையறியும் விசித்திரப் பறவை/விலங்கு | |
| **ஊர்வன (Reptiles)** | நீல நாகம் / அரசரா<br><br>உடும்பு<br><br>பாம்பு | இராஜநாகம் (*Ophiophagus hannah*)<br><br>நில உடும்பு (*Varanus*)<br><br>மலைப்பாம்பு, இதர பாம்புகள் | அடர்ந்த காடுகளில் மரக்கிளையில் கூடுகட்டி முட்டையிடும் தனித்துவப் பண்பு கொண்ட இராஜநாகத்தின் பதிவு (சாமி, *விலங்கின விளக்கம்* 57). |
| **பூச்சிகள் (Insects)** | வண்டு, ஞிமிறு (அகநானூறு 132)<br><br>மின்மினி (அகநானூறு 8)<br><br>சிதலை (அகநானூறு 112) | தேனீ, வண்டு வகைகள்<br><br>மின்மினிப் பூச்சி<br><br>கறையான் | மலர்களில் மகரந்தச் சேர்க்கை செய்தல் மற்றும் மண்ணை வளப்படுத்தும் கறையான் புற்றுகளை உருவாக்குதல் (காயத்ரி). |

### 3. விலங்கின நடத்தைவியலும் சூழலியல் அவதானிப்பும்

#### 3.1 கரடியின் உணவுத் தேடலும் உடலமைப்பும்

குறிஞ்சி நிலத்தில் வாழும் கரடியானது 'எண்கு' அல்லது 'உளியம்' என்று அழைக்கப்படுகிறது. இதன் உடல் மற்றும் நடத்தை சார்ந்து சங்கப் புலவர்கள் கொண்டுள்ள அவதானிப்பு துல்லியமானது. கரடியானது கூனல் விழுந்த முதுகினையும், குறுகிய அடியெடுத்து வைக்கும் குறுநடைத் தன்மையையும் கொண்டது (சாமி, *விலங்கின விளக்கம்* 211).

அதன் முதன்மையான உணவு கறையான் ஆகும். நள்ளிரவில் அது கறையான் புற்றுகளைத் தோண்டி உள்கூட்டை உண்ணும் காட்சியை நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர்கிழார் பின்வருமாறு விளக்குகிறார்:

" கூனல் எண்கிற குறு நடைத் தொழுகி
சிதலை செய்த செந்நிலப் புற்றின்
மண் புனை நெடுங்கோடு உடைய வாங்கி

இரை நசைஇப் பரிக்கும் ……..” (அகநானூறு 112)

மேலும், கரடியானது கறையான் புற்றுகளைத் தோண்டும்போது, அதன் உள்ளே பதுங்கியிருக்கும் பாம்புகள் கரடியின் வளைந்த கூர்மையான நகங்களால் (கொடுவிரல்) கீறப்பட்டுத் தன் வலிமையை இழந்து நடுங்கும் (பெருங்குன்றூர் கிழார், அகநானூறு 8). காரிருள் நள்ளிரவில் கரடி கறையான் புற்றைத் தோண்டும்போது, சுற்றிலும் மொய்க்கும் மின்மினிப் பூச்சிகள் பொன்னிற நெருப்புப் பொறிகளைப் போலச் சிதறும் காட்சியானது, உலைக்களத்தில் இரும்பு அடிக்கும் கொல்லனின் செயலோடு ஒப்பிடப்பட்டுள்ளது (அகநானூறு 72).

### 3.2 காட்டுப்பன்றியின் தறுகண்மையும் குடும்பப் பாதுகாப்பும்

காட்டுப்பன்றிகள் (கேழல்) தங்களின் குடும்பத்தின் மீதும், குட்டிகள் மீதும் கொண்டுள்ள அன்பு மற்றும் பாதுகாப்பு உணர்வு அகநானூற்றில் வியக்கத்தக்க வீரப் பின்னணியுடன் விளக்கப்படுகிறது. பெண் பன்றியையும் அதன் குட்டிகளையும் வேட்டை நாய்களிடமிருந்தும், வேடர்களிடமிருந்தும் காப்பாற்ற ஆண் பன்றியானது அஞ்சாமல் முன்னின்று போரிடுகிறது.

இக்காட்சியைக் கபிலர் பின்வரும் பாடலடிகளில் சித்திரிக்கிறார்:

” நான் முலைப் பிணவல் சொலியக் கானொழிந்து
அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன் ” (அகநானூறு 248)

வேட்டைக்கு வரும் கானவன், தன் குட்டிகளைக் காப்பாற்றத் தறுகண்மையுடன் (அஞ்சாமை) அரிய வழி முடுக்கில் வேடர்களைத் தடுத்து நிற்கும் பன்றியின் வீரத்தைக் கண்டு வியப்படைகிறான். "எம் நாட்டுப் பெருவீரனைப் போலத் தன் படையினர் அஞ்சி ஓடினாலும் தான் மட்டும் எதிர்த்து நின்று அஞ்சாது போரிடும் தன்மை இப்பன்றிக்கு உண்டு" என்று எண்ணி, அதன் மீது தன் கூரிய அம்பினை எய்யாமல் கானவன் விலகிச் செல்கிறான் (புலியூர்க்கேசிகன் 269).

மேலும், காட்டுப்பன்றிகள் இரவில் தினைப்புனம் கவரச் செல்லும் வேளையில், தங்களுக்கு வேட்டை வாய்க்குமா என்பதைக் கணிக்கும் வகையில் பல்லியின் சகுன ஒலியைக் கேட்டுப் புறப்படும் என்ற நடத்தைவியல் நம்பிக்கையும் கபிலரால் பதிவு செய்யப்பட்டுள்ளது (அகநானூறு 88).

### 3.3 புலியின் வேட்டை அறமும் துணைக்கான கடமையும்

குறிஞ்சி நிலத்துக் காடுகளின் முதன்மை வேட்டை விலங்கான புலியின் பண்புகளைக் கபிலர் நுட்பமாகப் பாடியுள்ளார். அண்மையில் குட்டி ஈன்று இளைத்துக் கிடக்கும் தன் பசிய பெண் புலியின் (வயவுப்பிணவு) பசியைப் போக்குவதற்காக ஆண் புலி நள்ளிரவில் வேட்டைக்குச் செல்கிறது.

” மான்றமை யறியா மரம்பயில் இறும்பின்
ஈன்றிளைப்பட்ட வயவுப்பிணப் பசித்தென

மடமான் வல்சி தரீஇய நடுநாள்
இருள்முகைச் சிலம்பின் இரை வேட்டெழுத்த
பனைமருள் எருத்திற் பல்வரி இரும்போத்து
மடக்கண் ஆமான் மாதிரத்தலறத்
தடக்கோட் டாமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்ப ஈர்க்கும்
பெருங்கல் நாட ……….” (அகநானூறு 238)

காட்டுப்பசுவான 'ஆமான் ஏறு' அலறும்படி அதனைத் தாக்கி, வலப்பக்கமாக விழச்செய்து கொன்று, பெரும் பாறைகள் இரத்தத்தால் சிவக்கும்படி இழுத்துச் செல்லும் ஆண் புலியின் இச்செயல், விலங்கினங்களிடையே நிலவும் துணைக்கான கடமை உணர்வை வெளிப்படுத்துகிறது (கபிலர், அகநானூறு 238). புலி தான் கொல்லும் விலங்கு வலப்பக்கமாக விழுந்தால் மட்டுமே அதனை உண்ணும் என்ற ‘வலம்படத் தொலைச்சி’ என்ற வேட்டை அறம் சங்க இலக்கியங்களில் தொடர்ந்து போற்றப்படுகிறது.

### 3.4 யானையின் வாழ்வியலும் புலியுடனான போரும்

யானையானது குறிஞ்சி நிலத்தின் கம்பீரமான விலங்காகும். ஆண் யானையானது மூங்கிலின் முளைகளைத் தன் கூட்டத்தோடு மேய்ந்துவிட்டு, நீர் அருந்தச் செல்லும் வழியில், தன்னைத் தாக்கக் காத்திருந்த புலியைக் கொம்பினால் குத்திக் கொல்கிறது. புலியைக் கொன்ற பெருமிதத்தோடு, வண்டுகளின் பாட்டொலியைக் கேட்டுக்கொண்டே வாழை மரத்தின் நிழலில் உறங்கும் யானையின் காட்சி அகநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது (மாமூலனார்).

” முளைவளர் முதல மூங்கில் முருக்கிக்
கிளையோடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கின் நிறம்பார்த்து ஒடுங்கிய
பொருண் முரண் உழுவை தொலைச்சிக் கூர்நனைக்
குருதிச் செங் கோட்டழிதுளி கழாஅக்” (அகநானூறு 33)

## 4. உயிர்-ஒலியியலும் விலங்கினத் துலங்கல்களும்

### 4.1 குறிஞ்சிப் பண்ணும் யானையின் துயிலிலும்

குறிஞ்சி நிலத்து விலங்குகள் இசையின் இனிமைக்குக் கட்டுப்படுபவை என்ற உண்மை சங்கப் பாடல்களில் பலவாறாகக் கூறப்படுகிறது (சுந்தர மகாலிங்கம் 75). அகநானூற்றின் 102-ஆம் பாடலில், தினைப்புனம் காக்கும் குறவர் குடியைச் சேர்ந்த கொடிச்சி (பெண்), சந்தனக் கட்டையை உரைத்துத் தன் கூந்தலில் பூசி உலர்த்தியவாறு, மலையே எதிரொலிக்கும்படி ‘குறிஞ்சிப் பண்’ பாடுகிறாள்.

” ………………………………………………… கொடிச்சி

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026

பெருவரை மருங்கில் குறிஞ்சிபாட
குரலும் கொள்ளாது , நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண்பாடு பெற்று ஒய்யென
மறம் புகல் மழகளிறு உறங்கும் நாடன் " (அகநானூறு 102)

அப்போது, தினைப்புனத்தில் புகுந்து தினையைக் கவர வந்த ஆண் யானை ஒன்று, அவளது பாடலின் இசையினால் ஈர்க்கப்பட்டு, தான் பறித்த தினைக்கதிர்களையும் உண்ணாமல், நின்ற நிலையிலிருந்து பெயராமல், தன் உறங்காத கண்களை மெதுவாக மூடிப் பண் கேட்டு உறங்குகிறது (மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங் கூத்தன்). விலங்குகளின் நரம்பு மண்டலம் இசையின் அதிர்வுகளுக்கு எவ்வாறு கட்டுப்படுகிறது என்பதைத் தற்கால அறிவியல் மெய்ப்பிக்கும் முன்னரே, சங்கப் புலவர்கள் இவ்வுண்மையை இலக்கியத்தில் பதிவிட்டுள்ளனர்.

### 4.2 மயில் நடனமும் காட்டின் இசையரங்கும்

மலைச்சாரல் காடுகளில் இயற்கையாக எழும் பல்வேறு ஒலிகள் இணைந்து ஓர் ஒட்டுமொத்த இசையரங்காக மாறுவதையும், அதற்கு எதிர்வினையாக மயில் நடனமாடுவதையும் கபிலர் வியக்கத்தக்க வகையில் படம் பிடிக்கிறார்:

" ஆடமைக் குயின்ற அவிர்துணை மருங்கிற்
கோடையவ்வளி குழலிசையாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதை குரலாகத்
கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப் பூஞ்சாரல் வண்டியாழாக
இன்பல் இமிழிசைகேட்டு கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்தியலியாடும் மயில்
நனவுப் புகு விறலியின் தோன்றும் நாட " (அகம். 82)

மூங்கிலின் துளைகளில் கோடைக் காற்று புகுந்து குழலிசையாக ஒலிக்கிறது; அருவி நீர் வீழ்ந்து முழவோசை எழுப்புகிறது; கலைமான்களின் குரல் கொம்பின் ஒலியாக அமைகிறது; வண்டுகளின் ரீங்காரம் யாழிசையாக ஒலிக்கிறது. இந்த இயற்கையான ஒலியரங்கில் மயில் ஒரு நாட்டியப் பெண் (விறலி) போல ஆடுகிறது; மந்திக் கூட்டம் (குரங்குகள்) வியப்புடன் அதனைப் பார்க்கின்றன (கபிலர், அகநானூறு 82).

இவ்வியற்கைக் காட்சியின் சிறப்பினைப் பிற்காலத்தில் கம்பர் தம் காப்பியத்தில் மருத நிலப் பின்னணியில் உவமையாகப் பின்வருமாறு பாடுகிறார்:

" தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந்
தாங்கக் கொண்டல்கள் முழவினேங்கக்

குவளை கண் விழித்து நோக்கத்
தொண்டிரையெழிலி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ" (கம்பராமாயணம் 24)

### 5. உள்ளுறை உவமமும் இறைச்சிக் கோட்பாடும்

அக இலக்கியத்தில் விலங்குகளின் நடத்தைகள் வெறும் பின்னணியாக மட்டுமின்றி, மாந்தர்களின் காதலைத் தூண்டும் உள்ளுறை உவமமாகவும், இறைச்சியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன (சுந்தர மகாலிங்கம் 30).

#### 5.1 வண்டின் கனவும் வரைவு கடாதலும்

தாயங்கண்ணனாரின் அகநானூறு 132-ஆம் பாடலில் வண்டின் செயல்பாடுகள் வழியாகத் தோழி தலைவனுக்கு வரைவு கடாயும் (திருமணத்தை வற்புறுத்தும்) காட்சி நுட்பமாக விவரிக்கப்படுகிறது. வண்டானது சுனையில் பூத்த பூக்களின் இதழ்களை அவிழ்த்து, வேங்கை மலரின் தாதுக்களை நுகர்ந்து, காந்தள் மலரில் உறங்கி, மேலும் பசியடங்காமல் யானையின் முகத்திலுள்ள மதநீரைக் குடிக்கக் கனவு காண்கிறது (தாயங்கண்ணனார்).

"மதநீரை உண்ணுவதாகக் கனவு கண்டதாம் வண்டு" (அகநானூறு 132)

இதன் உள்ளுறைப் பொருள் யாதெனில், தலைவன் தலைவியைக் கூடி மகிழ்ந்த பின்னரும், தோழியரின் உதவியால் பகற்குறியிலும் இரவுக்குறியிலும் அவளைத் தொடர்ந்து அடைந்து இன்புறுகிறான். ஆனால், அதோடு திருப்தியடையாமல் இன்னும் அரிய பல வழிகளில் அவளைக் கூட எண்ணித் திருமணம் செய்யாமல் காலம் கடத்துகிறான் (சுந்தர மகாலிங்கம் 50). தற்போது தினை விளைந்து அறுவடை செய்யப்பட்டுவிட்டதால், தலைவி இனி தினைப்புனம் காக்க வரமாட்டாள். எனவே, வண்டைப் போன்ற சஞ்சல குணத்தை விடுத்து, தலைவன் தலைவியைக் காப்பற்ற வரைந்து கொள்ள (திருமணம் செய்ய) வேண்டும் என்று தோழி இறைச்சிப் பொருள் மூலம் அறிவுறுத்துகிறாள்.

#### 5.2 குரங்கின் மயக்கமும் தற்காலிக இன்பமும்

அகநானூற்றின் 2-ஆம் பாடலில் கபிலர் குரங்கின் (கடுவன்) நடத்தையைக் குறியீடாகப் பயன்படுத்துகிறார். பலாச் சுளையையும் வாழைக் கனியையும் தின்ற ஆண் குரங்கு ஒன்று, தாகம் தணிக்க பாறைச் சுனையிலிருந்த தேனை நீரென்று பருகிவிட்டு, தேனுண்ட மயக்கத்தால் மரத்தின் மீது ஏற முடியாமல் சந்தன மரத்தின் நிழலில் பூப்படுக்கையில் உறங்குகிறது (கபிலர்).

இது, திருமண வாழ்வை மேற்கொள்ளாமல் களவுப் புணர்ச்சியில் மட்டுமே மூழ்கிக் கிடக்கும் தலைவனின் நிலைக்கு உள்ளுறை உவமமாகும். தற்காலிக இன்பத்தில் மயங்கிக் கடமையை மறக்கக் கூடாது என்ற எச்சரிக்கை இதன் மூலம் விடுக்கப்படுகிறது.

### 5.3 பரணரின் அகநானூறு 122: இயற்கைசார் தடைகளின் சங்கிலித் தொடர்

பரணர் பாடிய அகநானூற்றின் 122-ஆம் பாடல், களவுப் புணர்ச்சியில் ஈடுபடும் தலைவனும் தலைவியும் சந்திப்பதற்கு இயற்கையும் அதன் உயிரினங்களும் எவ்வாறு ஒரு சங்கிலித் தொடரான எதிர்வினையை (Chain Reaction) ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குகிறது.

" திங்கள் கல்சேர்பு கனையிருண் மடியின்
இவ்வெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகத் குழறும்
வளைக்கட் சேவல் வாளாடு மடியின்
மனைச் செறி கோழி மாண் குரலியம்பும் " (அகநானூறு 122)

காதலர்களின் களவுச் சந்திப்பிற்கு அன்னை, காவலர், நாய், நிலவொளி, பொந்தில் வாழும் கூகைச் சேவல் (ஆந்தை), விடியலை அறிவிக்கும் வீட்டுச் சேவல் என ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாக விழித்தெழுந்து முட்டுக்கட்டையாக அமைகின்றன. மனித ஒழுக்கவியலோடு இயற்கையின் உயிரியல் கடிகாரமும் (Biological Clock) எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை இப்பாடல் விவரிக்கிறது.

## 6. முடிவுரை

அகநானூற்றில் விவரிக்கப்பட்டுள்ள குறிஞ்சி நிலத்து உயிரினங்கள் வெறும் கவித்துவ வர்ணனைகள் அல்ல, மாறாக அவை சங்க காலத் தமிழர்களின் ஆழமான சூழலியல் அறிவின் வெளிப்பாடாகும். விலங்குகளின் உணவுத் தேடல், பாதுகாப்பு உணர்வு, குடும்ப ஒழுக்கம், இசையினாலாகும் உடலியல் மாற்றங்கள் ஆகியவை இன்றைய நவீன விலங்கியல் ஆய்வுகளுக்கு இணையான உண்மைகளைக் கொண்டுள்ளன. மனிதன் இயற்கையைத் தன் தேவைகளுக்காக அழிக்கும் தற்காலச் சூழலில், மனிதனும் சக விலங்கினங்களும் ஒன்றோடொன்று இணங்கி வாழ வேண்டும் என்ற சங்க இலக்கியத்தின் சூழலியல் மெய்யியல் இன்றைய உலகிற்கு மிக அவசியமான வாழ்வியல் விழுமியமாகும்.

## 7. பின்குறிப்புகள் (Footnotes)

[^1]: குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகும். யாமப் பொழுதும் கூதிர்காலமும் இதன் பின்னணிகளாகும்.

[^2]: அசுணம் என்பது சங்க இலக்கியங்களில் இசைக்குக் கட்டுப்பட்டு, வல்லோசை கேட்டால் மடியும் தன்மையுடையதாகக் கூறப்படும் ஒரு விசித்திரமான உயிரி/பறவையாகும்.

**8. துணைநூல் பட்டியல் (Works Cited / References in MLA Style)**

[1.] கபிலர், பரணர் மற்றும் பலர். *அகநானூறு*. உரை: புலியூர்க்கேசிகன், சாரதா பதிப்பகம், 2010.

[2.] கம்பர். *கம்பராமாயணம்*. உரை: அ. ச. ஞானசம்பந்தன், முல்லை நிலையம், 2012.

[3.] காயத்ரி, ம. "அகநானூற்றில் குறிஞ்சி வாழ் உயிரினங்கள்." *தமிழ்ப் பொழில்*, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி, 2024.

[4.] சாமி, பி. எல். *சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்*. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1976.

[5.] சாமி, பி. எல். *சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்*. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1970.

[6.] சுந்தர மகாலிங்கம், கோ. *சங்க இலக்கியத்தில் சூழலியல் கோட்பாடுகள்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2015.

[7.] இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*. உரை: ந. மு. வேங்கடசாமி நாட்டார், சாரதா பதிப்பகம், 2008.